## கோமாரி நோய்

கால்களை வாய்க்கானை என்றும், கால் சப்பை வாய்ச் சப்பை என்றும் இந்நோய்க்கு வேறு பெயர்களும் உண்டு. இவ்வைரஸ் நுண்கிருமி, அதிக நாள் உயிருடன் வாழும் குணம் உடையது. இந்நோய்க் கிருமியில் 7 வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் நோய் ஏற்படுத்தும் விதத்தில் வேறுப்பட்டவை. தற்போதுள்ள தடுப்பூசி மருந்து முழு நோய் எதிர்ப்புத் திறனை அளிப்பதில்லை. நோய் எதிர்ப்புத் திறன் காலமும் நான்கு மாதம் தான், எனவே, நான்கு மாதத்திற்கு ஒரு முறை தடுப்பூசி போட வேண்டும். இந்நோய், தீவனம், நீர், காற்று மூலம் பரவுகிறது.

**நோய் அறிகுறிகள்**

1. ஆரம்பத்தில் காய்ச்சல் 41 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும்.
2. வாயிலிருந்து சளி போன்ற நுரையுடன் கெட்டியான உமிழ்நீர், கயிறு போன்று தொங்கிக் கொண்டிருக்கும். நோய்கண்ட மாடுகள், தொடர்ந்து, வாயைச் சப்பிய வண்ணம் காணப்படும்.
3. வாயைத் திறந்து பார்த்தால் நாக்கின் மேல்புறம், மேலண்ணம், வாயின் உட்பகுதி முதலியவற்றில் மெல்லிய, நீர் கோர்த்த கொப்பளங்கள் காணப்படும். ஓரிரு நாட்களில் ஆங்காங்கே கொப்பளங்கள் தொங்கிய வண்ணம் இருக்கும். இதனால் தீவனம் உட்கொள்ள முடியாது.
4. கால்களில் குளம்புகளுக்கிடையே உள்ள தோலிலும், குளம்புகளுக்குச் சற்று மேல்புறமுள்ள தோலிலும் புண்கள் உண்டாகும். வலி காரணமாக மாடுகள் அடியெடுத்து வைக்க அஞ்சும். குளம்புகள் நாளடைவில் கழன்று விழுந்து விடும்.
5. நோய் கண்ட பசுக்களில் பால் அருந்தும் கன்றுகள் இறந்துவிடும்.
6. மடி, காம்பு போன்றவற்றில் கொப்பளம் தோன்றிப் பின்பு புண் ஏற்படும்.

**தடுப்பும், பாதுகாப்பும்**

1. கன்றுகளுக்கு 3 மாத வயது முதல் கோமாரி நோய்த் தடுப்பூசியும் பின்பு 4-6 மாதங்களுக்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியையும் தவறாமல் போட வேண்டும்.

2. சோடியம் ஹைட்ராக்சைட் மற்றும் பொட்டாசியம் ஹைட்ராக்சைட் கிருமி நாசினி மருந்தை 3-4 சதம் கரைசலாக்கித் தரையில் தெளிக்க வேண்டும். பிளிச்சீங் பவுடரைத் தரையில் தூவி இக்கிருமியின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.
3. நோய் ஏற்பட்டால் நோயுற்ற மாடுகளை ஒதுக்குப்புறமாக வைத்து சிகிச்சையளிக்க வேண்டும். இதர ஆரோக்கியமான மாடுகளோடு தொடர்பு இருக்கக் கூடாது.
4. நோயுற்ற மாட்டின் பாலை, கன்றுகளுக்கு ஊட்டி விடக்கூடாது.
5. நோய் பரவியுள்ள சமயத்தில் மாடுகளைச் சந்தையில் வாங்கவோ, விற்கவோ கொண்டு செல்லக் கூடாது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைப்படி வாய்ப்புண், குளம்புபுண் குணமடைய கீழ்க்கண்ட முறைகளை பின்பற்றவும்**

**வாய்ப்புண் வந்த கால்நடைகளுக்கு முதலுதவி செய்யும் முறை:** சீரகம் 50 கிராம், வெந்தயம் 30 கிராம், மஞ்சள் பொடி 10 கிராம், பனைவெல்லம் 20 கிராம் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து நன்கு அரைத்து, அதை தேங்காய்த் துருவலோடு சேர்த்துவைத்து மாட்டின் தலையை நன்றாக தூக்கிப் பிடித்துக்கொண்டு இரு கடைவாய்களின் வழியாக உள்ளே தள்ள வேண்டும். ஒரு நாளைக்கு காலை, மாலை என இருவேளைகள் வீதம் 3 நாள்களுக்கு கொடுத்தால் கோமாரியிலிருந்து குணமடைந்து விடும்.

**குளம்புகளில் புண் ஏற்பட்டிருக்கும் கால்நடைகளுக்கு** :குப்பைமேனி 100 கிராம், மஞ்சள் 100 கிராம், பூண்டு 10 பல் ஆகியவற்றை நன்கு இடித்து எடுத்துக் கொண்டு அதில் 250 கிராம் இலுப்பை எண்ணெய் சேர்த்து நன்கு காய்ச்சி இறக்கிக் கொள்ள வேண்டும். உப்பும் மஞ்சளும் சரிவிகிதத்தில் தண்ணீரில் கலந்து கால்நடையின் கால்களை நன்கு கழுவிவிட்டு ஈரத்தை காய்ந்த துணியால் ஒற்றியெடுத்துவிட்டு அதில் காய்ச்சி இறக்கிய மருந்தை 2-3 நாள்கள் வரை போட்டு வந்தால் புண் ஆறிவிடும்.

கோமாரி நோய் அறிகுறிகள்



சளி போன்ற நுரையுடன்
கெட்டியான உமிழ்நீர்



நாக்கின் மேல்புறம், மேலண்ணம், வாயின் உட்பகுதி முதலியவற்றில் மெல்லிய, நீர் கோர்த்த கொப்பளங்கள் காணப்படும்



குளம்புகளுக்குச் சற்று மேல்புறமுள்ள தோலிலும் பண்கள் உண்டாகம்



கால்களில் குளம்புகளுக்கிடையே உள்ள தோலில் புண்கள் உண்டாகும்